03.02.2025 எம்.சி.ஓ.பி. எண். 70/2019 ம.சா.1 பாரதி

<u>**குறுக்கு விசாரணை**</u>

விபத்து 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடந்தது. குலதெய்வ கோவில் பச்சையம்மன் கோவிலுக்கு சென்று வீட்டிற்கு திரும்பி வந்தேன். தீபாவளிக்காக சேத்பட் சென்று பொருட்களை வாங்கிக்கொண்டு திரும்பி வந்தபோது விபத்து ஏற்பட்டதாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் இல்லை. பச்சையம்மன் கோவில் ஆரணி அருகே வாழைப்பந்தல் கிராமத்தில் உள்ளது. என் ஊரிலிருந்து சேத்பட் சென்று அங்கிருந்து தான் வாழைப்பந்தல் வரவேண்டும். விபத்து நடந்தபோது பகல் 2.30 மணி இருக்கும். சேத்பட் - வந்தவாசி சாலை சுமார் 60 அடி அகலம் இருக்கும், 3 பேருந்துகள் செல்லலாம். இருசக்கர வாகனத்தை என் மகன் ஓட்ட பின்னால் நான் உட்கார்ந்து வந்தேன். இருசக்கர வாகனத்தில் இரண்டு பக்கமும் பைகளை மாட்டிக்கொண்டு வந்ததாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் இல்லை. சேத்பட் - வந்தவாசி சாலையில் என்னுடைய ஊர் வில்லிவளம் கூட்ரோட்டில் இருந்து திரும்பி என் ஊருக்கு செல்லவேண்டும். எதிரில் கார் வந்தது. மேற்சொன்ன கூட்ரோட்டிற்கு முன்பு சாலை வளைவான பகுதி தான். விபத்திற்கு காரணம் என்னுடைய மகன் தான் என்றும் எதிரில் வாகனம் வருவதை கவனிக்காமல் என் மகன் இடதுபுறமிருந்து வலதுபுறமாக திரும்பியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. காவல் துறையினர் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்திலும் கார் சரியான திசையில் தான் வந்துள்ளது என்றும் என் மகன் வலதுபுறம் திரும்பியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து தேதியில் என் மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. என் மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததாக தவறாக சொல்கிறேன் என்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் என்னுடைய மகன் ஆய்வின்போது ஓட்டுநர் உரிமத்தை ஆஜர்படுத்தவில்லை என கூறியுள்ளார் என்றால் சரியல்ல. வீட்டில் எங்களுடைய சொந்தவேலையை செய்வேன். கிராமத்தில் கூலிவேலைக்கு செல்வேன். விபத்திற்கு காரணம் 2ம் எதிர்மனுதாரர் கிடையாது என்றும் விபத்து என்னுடைய மகனின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்ட இடம் வளைவான பகுதி என்றும் வாகனம் வருவதை கவனிக்காமல் என்னுடைய மகன் வலதுபுறமாக

திரும்பியதால் விபத்து ஏற்பட்டது என்றும் விபத்திற்கு காரணம் என்னுடைய மகனின் கவனக்குறைவு தான் என்றால் சரியல்ல. அதனால் இம்மனு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.